# கம்பராமாயணத்தில் அறியலாகும் மருத்துவச் செய்திகள்

## Medical information found in Kambar's Ramayana.

**கு.சரவணன்**

முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

சேர்க்காடு வேலூர் 632115 Email: saravanan1332000@gmail.com

**முனைவர் க.சிங்காரவேலு**

நெறியாளர் (ம) உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை, திருவள்ளுவர் பல்கலைக்கழகம்

சேர்க்காடு வேலூர் 632115

**K. Saravanan**

Research Scholar, Department of Tamil, Thiruvalluvar University Serkadu, Vellore 632115 Email: saravanan1332000@gmail.com

**Dr. K. Singaravelu**

Research Guide, Assistant Professor, Department of Tamil, Thiruvalluvar University Serkadu, Vellore 632115

**Abstract:**

The Kamba Ramayanam is an epic that tells the story of Rama in Tamil. Kambar named this work Ramavataram, and he composed it in accordance with Tamil traditions, integrating the epic with the culture.The Kamba Ramayanam contains information from various fields such as astronomy, geography, mathematics, technology, and agriculture, alongside significant details related to medicine. Throughout the epic, we find descriptions of diseases and their remedies. A dedicated chapter, the Marundhumalai Padalam (Chapter of the Mountain of Medicine), further highlights Kambar's extensive knowledge of medical traditions, which is the focus of this research.

**Keywords**: Kambaramayanam, Maruthuvam, Sanjeevi Mooligai

**ஆய்வுச் சுருக்கம்**

*கம்பராமாயணம் இராமனது வரலாற்றை தமிழில் எடுத்துக் கூறும் வழி நூலாகும். கம்பர் இந்நூலுக்கு இராமவதாரம் என பெயரிட்டுள்ளார். தமிழ் மரபுக்கு ஏற்ப காப்பியத்தை பண்பாட்டோடு இணைத்து பாடியுள்ளார். கம்பராமாயணத்தில் வானியல், புவியியல் ,கணிதவியல், தொழில்நுட்பம், வேளாண்மையில் என பல்வேறு துறை சார்ந்தச் செய்திகளோடு மருத்துவத்துறை சார்ந்த செய்திகளும் காணப்படுகிறது. நோய்கள் பற்றியும் நோய்களுக்கு தீர்வாக மருந்துகள் பற்றியும் காப்பியம் முழுவதும் காணப்படுவதோடு மருத்துவத்திற்கென தனியே மருந்துமலைப் படலம் அமைந்துள்ளதன் மூலம் கம்பரின் மருத்துவ மரபு அறிவை வெளிக்கொணர்வது இவ்வாய்வின் நோக்கமாக அமையும்.*

**திறவுச் சொற்கள்**: *கம்பராமாயணம், மருத்துவம், சஞ்சீவி மூலிகை.*

**முன்னுரை:**

தமிழ் இலக்கிய வகைகளில் காப்பிய நூல்களில் வரிசையில் ஒன்றாக குறிப்பிடப்படுவது கம்பராமாயணம் ஆகும். தமிழ் பண்பாட்டு மரபிற்கேற்பத் தந்த காவியமே கம்பராமாயணம். பழங்காலத்தில் பண்பாட்டு வளர்ச்சியில் சிறந்த விளங்கிய தமிழர்கள் மருத்துவம் பற்றிய செய்திகளைப் பல்வேறு நூல்களிலும் குறிப்பிட்டுள்ளனர். கம்பராமாயணத்தில் மண்ணியியல், விண்ணியியல்,

கணிதவியல், அரசியல் பற்றிய செய்திகளும் கூறப்பட்டுள்ளன. அவற்றில் கம்பராமாயணத்தில் காணப்படும் மருத்துவச் செய்திகளை ஆராய்ந்து எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**மருந்தின் சிறப்பு**

சுற்றுச்சூழலின் குறிப்பிடத்தக்க இடத்தைப் பெறுவது மூலிகை காப்பாகும். நோயற்ற வாழ்விற்கு இயற்கை நமக்கு அளித்த வரம் மூலிகைகள். அவை வேர், தண்டு, இலை, தலை, அரும்பு, முத்து(மணி), மலர், காய், கனி, சருகு, என அனைத்து நிலைகளையும் உலகிற்கு நல்கி உயிர் காக்கும் உயர் பண்பை கொண்டுள்ளன. நாம் முன்னோர்கள் மருத்துவத்தில் வல்லுனர்களாக இருந்துள்ளனர். மருத்துவ செய்திகளையும் குறிப்புகளையும் சித்தர்கள் சுவடிகளில் காலம் காலமாக பதிவு செய்து தேவைக்கு ஏற்ப பயன்படுத்தி உள்ளனர். மலைப்பகுதிகளிலும் வனப்பகுதிகளும் வசித்து வருகிற பழங்குடி மக்கள் ஆங்கில மருத்துவ முறைகள் ஏதும் அறியாத மனிதர்கள் மூலிகை மருத்துவத்தையே முதன்மை மருத்துவமாகப் பயன்படுத்துகின்றன.

**இலக்குவணன் பிரம்மாஸ்திரத்தில் வீழ்ந்தான்**

கோடி நூறாயிரம் அம்புகள் இலக்குவனது உடலில் பாய அவன் உடல் முழுவதும் அம்பால் மறைந்துவிட்டன. சற்றும் எதிர்ப்பாராமல் நிகழ்ந்த தாக்குதலால் இலக்குவன் முர்ச்சையாகிவிட்டான் என்பதனைக் கம்பர் பெரிய வலிமை பொருந்திய யானையானது துயில் கொள்வது போல் காணப்படுவதாக உவமைக்கிறார் என்பதை,

**“கோடிக்கோடி நூறாயிரம் சுடர்கணைக் குழாங்கள்**
**மூடி மேனியை முற்றுறச் சுற்றின மூழ்க**
**ஊடு செய்வது ஒன்று உணர்த்தியவர் உணர்வு புக்க ஓடுங்க**
**ஆடால்மாக் கரிசேவம் அமைந்தென அமர்ந்தான்”**

**(கம்பராமாயணம் பிரம்மாஸ்திர படலம் 8611)**

என்ற பாடலிலன் மூலம் அறியலாம்.

**வீடணன் இராமனையும் இலக்குவணையும் காத்தல்**

இந்த போர்க்களத்தில் அனைத்து வீரர்களும் விழ்ந்தினர் அங்கதன் தன் உடலில் பதினாறு ஆயிரம் அம்புகளை பாய்ந்த வண்ணம் மண்ணில் வீழ்ந்தான் இலக்குவன் உடலில் அம்புகள் தைக்கப்பட்டு மயங்கி விழுந்தான். இதனைக் கண்ட இராமன் என்ன செய்வதென்று தெரியாமல் மயக்கமுற்று வீழ்ந்து விட்டான் திரும்பிப் பார்த்தால் அனுமனும் மயங்கி கிடக்கிறான். விடணன் அனுமனைத் தேடி அவன் முகத்தில் நீர் தெளித்து உடலில் இருந்த அம்புகளை அகற்றி அவனை எழுப்பினான். எழுந்தவுடன் அனுமனை அழைத்துக் கொண்டு சாம்பவானிடம் நிகழ்தந்தை தெரிவித்து ஆலோசனை கேட்டான் போர்க்களத்தில் வீழ்ந்து கிடப்பவர்களை எழுப்புவதற்காக விரைந்து சென்று மருந்து கொண்டு வருமாறு சாம்பவான் கூறுவதாக அமைந்த பாடல்

**“எழுபது வெள்ளத்தோரும் இராமனும் இளைய கோவும்**
**முழுதும் இவ் உலகம் மூன்றும் நல் அற மூர்த்திதானும்**
**வழு இலா மறையும் உன்னால் வாழ்ந்தன ஆகும்; மைந்த!**
**பொழுது இறை தாழாது என் சொல் நெறி தரக் கடிது போதி”**

**(கம்பராமாயணம் மருந்துமலைப் படலம் 8725)**

இப்பாடல், விழுந்து கிடந்தோரின் எண்ணிக்கையைக் காட்டும் பாடல் ஆகும். வெள்ளம் என்பது அளவை குறிப்பதாகும். சாம்பவான் அனுமன் செல்ல வேண்டிய திசையினையும் கடக்க வேண்டிய தூரங்களையும் விரைவாக தெரிவிக்கிறான்.

**அனுமன் கொண்டு வர வேண்டிய மூலிகை மருந்துகள்**

கடலைக் கடந்து ஒன்பதாயிரம் யோசனை தூரம் சென்றால் இமயமலை, அதனைக் கடந்து பின் பல யோசனை தூரம் சென்றால் ஏமகூடமலை, பின்னர் ஒன்பதாயிரம் உயோசனை கடந்தால் நிடதம் என்று அழைக்கப்படும் செம்மலை, மேலும் ஒன்பதாயிரம் யோசனை கடந்து போனால் வடமலை என்று அழைக்கப்படும் மேருமலை, அதற்கும் ஒன்பதாயிரம் யோசனை தொலைவில் உள்ளது நீலகிரி மலை, அதனையும் கடந்தால் நான்காயிரம் யோசனை தொலைவில் உள்ளது கரிய மருந்து மலை, அந்த மலையில் கிடைக்கக்கூடிய மருந்துகள் பற்றிய செய்திகளைச் சாம்பவான் கூறுமாறு அமைந்த பாடல்

**“மாண்டாரை உய்விக்கும் மருந்து ஒன்றும்,**
**உடல் வேறு வகிர்களாகக்**
**கீண்டாலும் பொருந்துவிக்கும் ஒரு மருந்தும்**
**படைக்கலங்கள் கிளைப்பது ஒன்றும்**
**மீண்டேயும் தம் உருவை அருளுவது ஓர் மெய்ம்**
**மருந்தும் உள நீ வீர!**
**ஆண்டு ஏகி கொணர்தி என அடையாளத்தொடும்**
**உரைத்தான் அறிவின் மிக்கான்”**

**(கம்பராமாயணம் மருந்துமலைப் படலம் 8729)** என்ற பாடல் மூலம் நான்கு வகை மருந்துகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு பயன்களை கொண்டவை என்பதை அறியலாம். அவை,

1. **சஞ்சீவி கரணி**

இறந்தவர்களின் உடலை உயிர்பித்து மீண்டும் உயிர் கொண்டு வருவது சஞ்சீவி கரணி ஆகும்

2. **சல்லிய கரணி**

துண்டாக்கப்பட்ட உடலின் பாகங்களை ஒன்றாகச் சேர்த்து வைக்கக்கூடிய மூலிகை மருந்தாகும்.

**3.விசல்ய காரணி**

போரில் உடலினுள் பாய்ந்த ஈட்டி, கத்தி போன்ற ஆயுதங்களை இம்மூலிகை கொண்டு வெளியில் கொண்டு வர செய்து உடலினைச் சரி செய்வது மூலிகையின் சிறப்பாகும்.

**4.சாவல்ய கரணி**

சிதைந்த உடலின் பாகங்களையும் முன்பு இருந்தது போல் ஒன்றாக சேர்த்து வைப்பதாகும். இந்த நான்கு வகை மூலிகை பற்றி தமது நூலான கம்பராமாயணத்தில் கூறியுள்ளார்.

இம்மூலிகைகள் பறிக்க செல்லும்போது தடை செய்யும் தெய்வங்களைப் பற்றி கூறி அனுப்பிய சாம்பவான் வீடணனுடன் சென்று இராமனைக் கண்டு அவரிடமும் இந்த மருந்துகள் பற்றி

**“சல்லியம் அகற்றுவது ஒன்று சந்துகள்**
**புல்லுறப் பொருத்துவது ஒன்று போயின**
**நல் உயிர் நல்குவது ஒன்று நல் நிறம்**
**தொல்லையது ஆக்குவது ஒன்றை”**

**(கம்பராமாயணம் மருந்துமலைப் படலம் 8972)**

என்று விளக்கினார்.

**மருந்து மலையும் மாருதியும்**

மருந்தோடு மருந்தாகிய அனுமன் வருவான் நீ வருந்தல் வேண்டாம் என்று ஆறுதல் உரைத்தார். அனுமன் மருத்துவ மூலிகையை மட்டும் கொண்டு வருவான் என்று எண்ணியிருந்தனர் ஆனால், அனுமன் மருந்து மலையையே பெயர்த்துக் கொண்டு வந்து விட்டான் என்பதை,

**“இங்கு நின்று, இன்னன மருந்து என்று எண்ணினால்**
**சிங்குமால் காலம்’ என்று உணரும் சிந்தையான்**
**அங்குஅது வேரொடும் அங்கை தாங்கினான்**
**பொங்கிய விசும்பிடைக் கடிது போகுவான்”**

**(கம்பராமாயணம் மருந்துமலைப் படலம் 8766)**

என்ற பாடல் மூலம் அறியலாம்.

ஆயிரம் யோசனை அகலமும் ஆயிரம் யோசனை உயரமும் உடைய அந்த மலையை ‘ஏ’ என்று உரைக்கும் கனத்திற்குள் பெயர்த்து எடுத்து தன் கையில் ஏந்தினான் என்பதை,

**“ஆயிரம் யோசனை அகன்று மீ உயர்ந்து**
**ஆயிரம் யோசனை ஆழ்ந்தது அம் மலை**
**‘ஏ’ எனும் மாத்திரத்து ஒரு கை ஏந்தினான்”**

**(கம்பராமாயணம் மருந்துமலைப் படலம் 8767)** என்னும் பாடலில் கம்பன் கூறுகிறார்.

அனுமன் நெடிய உருவினைக் கொண்டு தன் கையில் மருந்து மலையைத் தாங்கியவாறு வருவதற்கு முன்னரே அந்த மலையின் மூலிகை மணமானது வந்துவிட்டது. அந்த மூலிகை காற்று பட்டவுடனே போர்க்களத்தில் மயங்கி கிடந்த வீரர்கள் உயிர்பெற்று எழுந்தனர் என்ற செய்தி குறிப்பிடப்படுகிறது.

**சஞ்சீவினி மூலிகை**

சஞ்சீவி மூலிகை பற்றிய ஆய்வுகளை ஆய்வாளர்கள் மேற்கொண்டனர். அந்த ஆய்வின் முடிவில் ஓரளவு ஒற்றுமை உடையதாக கருதப்பட்ட இரண்டு தாவரங்களை சஞ்சீவினி எனக் கண்டறிந்தனர்.

1. செலாஜீனெல்லா பிரையோடிப்ஸ் ------ சஞ்சீவினி பூதி
   Selaginella briopteries
2. டெஸ்மோட்ரிகம் பிம்ரியேடம் --------- ஜீவகா

   Desmortrichum fimvriatum

இந்த இரண்டு மூலிகைகள் பற்றிய ஆய்வினைக் குவாளியார் நகரில் உள்ள நவீன ஆய்வகத்திள் விஞ்ஞானியாகிய முனைவர் கோ. ஷாவும் ஹைதராபாத் பல்கலைக்கழகத்தில் உள்ள விஞ்ஞானியான முனைவர் சர்மிஷ்டா பானர்ஜியும் சேர்ந்து ஒரு ஆய்வு கூடத்தில், ஆராய்ச்சியின்போது பயன்படுத்தப்படும் வெள்ளெலி மீது உடலில் பல்வேறு செடிகளின் சாற்றை செலுத்தி ஆராய்ச்சி செய்தனர். அப்போது மூலிகை சாற்றின் தாக்கம் கண்டறியப்பட்டது சஞ்சீவினி பூதியும், ஜீவகாவச் செடியும் சஞ்சீவி மூலிகைகளாக தேர்வு செய்யப்பட்டன. இந்த மூலிகை செடி புரோ நகரின் மலைப்பகுதிகளில் காணப்படுவதாகவும் இவையே அனுமன் தேடி வந்த மூலிகையாக இருக்கலாம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளன. (அக்டோபர் 2009-ப-80)[1]

**குறிஞ்சி நிலத்தில் மருத்துவம்**

கம்பர் காப்பியம் முழுவதும் பல பாடல்களில் மருத்துவம் சார்ந்த குறிப்புகளைத் தந்துள்ளார். பால காண்டம் ஆற்றுப்படலத்தில் அந்நாட்டுக் குறிஞ்சி நிலப் பெண்கள் சரயு நதிக்கரையில் குளிக்கும்போது அவர்களின் மேனி எழிலுக்கும் ஆரோக்கியத்திற்கும் ஸ்தானப் பொடியை சித்த மருத்துவ முறைப்படி பயன்படுத்தினார் என்பதை உணர்த்தும் பாடல்,

**“கொடிச்சியர் இடித்த சுண்ணம்**
**குங்குமம் கோட்டம் ஏலம்**

**நடுக்குறு சந்தம் சிந்தூ**
**ரத்தொடு நரந்தம் நாகம்**
**கடுக்கை ஆர் வேங்கை கோங்கு**
**பச்சிலை கண்டில் வெண்ணெய்**
**அடுக்கலின் அடுத்த தீந் தேன்**
**அகிலொடு நாறும் அன்றே"**

**(கம்பராமாயணம் ஆற்றுப் படலம் 24)**

இந்த பாடலில் குங்குமப்பூ, ஏலக்காய், சந்தனம், வெட்சிப்பூ, நரத்தம்புல், சுரப்பண்ணை, கடுக்காய் கொன்றை, கத்திப் பூ, வேங்கை, திருநீற்றுப்பச்சை, தேன், அகில் பட்டை ஆகியனவற்றை சரயு நதியில் குளிக்கும்போது குறிஞ்சி நிலப் பெண்கள் பயன்படுத்தினர்கள் என்று கம்பர் கூறுகிறார்.

**இறந்தவர்களின் உடலை பாதுகாக்கும் முறை**

நாம் அனைவரும் தற்போது வாழ்ந்து கொண்டிருக்கும் சமுதாயத்தில் இறந்தவர்கள் உடலைச் சில வேதிப்பொருட்களைப் பயன்படுத்தி பாதுகாப்பர். அது மட்டும் இன்றி குளிர்சாதனப் பெட்டியைக் கொண்டு உடலைப் பாதுகாக்கின்றன. கம்பர் தம் காலத்தில் இறந்தவர்கள் உடலைப் பாதுகாக்கச் சில மூலிகை தைலங்களைப் பயன்படுத்தி உள்ள செய்தினைப் பதிவு செய்துள்ளார். தசரத மன்னன் இறந்தபோது அவருடைய இறுதிச் சடங்கை நிறைவேற்ற இராமன் வருவதற்கு காலதாமதம் ஏற்பட்டதால் மூலிகைக் தைலத்தால் அவர் உடல் பாதுகாக்கப்பட்டது என்று கூறப்படுகிறது, இதனை,

**"தையற் கடலிற் கிடந்த தானைத்**
**தைலக் கடலின் தலை யுய்த்தான்"**

**(கம்பராமாயணம் தைலமாட்டுப் படலம் 576)**

என்ற பாடல் மூலம் அழகாய் கம்பர் தெரியப்படுத்துகிறார்**.**

**மந்திர மருத்துவம்**

கொடிய விஷம் கொண்ட பாம்புகள், தேள், வண்டு முதலிய உயிரினங்கள் மனிதர்களைத் தீண்டினால் அவற்றின் மூலம் கொடிய நஞ்சு நமது உடலில் கலந்து உயிர் போகும் நிலை உண்டாகும். இதனைக் கம்பர் தம் பாடல் வரிகள்,

**"வெள்ளெயிற்று அவரின் வெல் விடத்தை**
**மார்க்கு முது மந்திரம்"**

**(கம்பராமாயணம் உருக்காட்டுபடலம் – 762)**

மூலம் மந்திரம் ஓதியும் மூலிகை செடிகளின் மூலமும் நஞ்சுகளைக் குணப்படுத்தினார்கள் என்பதை எடுத்துரைக்கின்றன.

**காந்த சிகிச்சை முறை**

கம்பராமாயணத்தில் காந்த சிகிச்சை முறை என்பது போரில் காயம் அடைந்தவர்கள் உடலில் சிக்கிய கூறிய ஆயுதங்களையும் அவற்றின் காயங்களையும் அகற்றுவதற்கு காந்த சிகிச்சை முறை பயன்படுத்தப்பட்டது என்பதனை தசரதன் இராமனது மார்பினை தலுவி நின்றபோதுக் வருந்தி கொண்டிருந்த இரும்புவேல் போன்ற துன்பத்தினை வெளியேற்றிய ஆறுதல் அளித்த்து. என்பதை கூறும்போது இராமன் காந்தமாக உவமிக்கப்படுகிறார்.

**"அன்று கேகயன் மகள் கொண்ட வரம் எனும் அயில் வேல்**
**இன்றுகாறும் என் இதயத்தினிடை நின்றது என்னைக்கொன்று**
**நீங்கலது இப்பொழுது அகன்றது உன் குலப்பூண்**
**மன்றல் ஆகம் ஆம் காந்தமா மணி இன்று வாங்க"**

**(கம்பராமாயணம் கும்பகர்ணன் வதைப் படலம் 10068)**

என்ற பாடல் அடிகள் மூலம் காந்த சிகிச்சை முறைகள் நடத்தப்பட்டன என்பதைக் கம்பர் குறிப்புகளால் அறிய முடிகிறது.

**அறுவை சிகிச்சை முறை**

மருத்துவ முறையில் சிறப்பிற்குரிய பகுதி என்னவென்றால் அறுவை சிகிச்சை முறை ஆகும். கம்பராமாயணத்தில் அறுவை சிகிச்சைப் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன. அறுவை சிகிச்சை முறையைப் பற்றி பல்வேறு நூல்களில் குறிப்புகள் உள்ளன. அறுவை சிகிச்சை முறையை பற்றி குலசேகர ஆழ்வார் பாடிய பாடல்,

**“வாளால் அறுத்து சுடினும் மருத்துவன் பால்**
**மாலா காதல் நோயாளன்போல் மாயத்தால்**
**மீளாத்துயர் தரினும் வித்துவக்கோட் டம்மானேநீ**
**ஆளா உனதருளே பார்ப்பன் அடியேனே”**

**(பெருமாள் திருமொழி 5 பாடல்)**

என்ற பாடல் மூலம் வாளால் வெட்டி தீயால் வாட்டினாலும் மருத்துவமன் நோயாளியை வெறுக்க மாட்டான். அதுபோல துயர்களைத் தரும் உன்னை நான் வெறுக்க மாட்டேன என்று குலசேகர ஆழ்வார் பாடிய பாடலில் அறுவை சிகிச்சைக்கான அடிப்படை காணப்படுவதை உணரலாம்.

**“பஞ்சியும் களையாய் புன்னர்”**

**(புறநானூறு 353)**

என்று அறுவை சிகிச்சை முறையைப் பற்றி புறநானூறு நூலும் குறிப்பிடுகின்றது. உடலில் தோன்றும் தேவையில்லாத கழலைக் கட்டிகளை அறுத்து மருத்துவம் செய்யும் முறையைப் பற்றி, கம்பர் நான்கு நிலைகளில் குறிப்பிடுவதைக் காணலாம் ,

**“உடலைத் தோன்றிற் கொன்றை அறுத்து அதன் உதிரம் ஊற்றி**
**சுடலுறச் சுட்டு வேறொர் மருந்தினால் துயரம் தீர்வார்”**

**(கம்பராமாயணம் கும்பகர்ணன் வதைபடலம் 7417)**

என்ற பாடல் மூலம்

1 கட்டியின் அறுத்தெடுத்தல்
2.கட்டியின் அசுத்த இரத்தத்தை வெளியேற்றுதல்
3.அறுத்த இடத்தில் சுடுதல்
4.புண் ஏற்பட்ட இடத்தில் மருந்து இடுதல்

என்று நான்கு நிலைகளில் அறுவை சிகிச்சை முறையைப் பற்றி கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

**முடிவுரை**

கம்பராமாயணத்தில் உயிர் பிரிந்த உடலிற்கு மீண்டும் உயிரை கொடுக்கும் வல்லமைக் கொண்ட சஞ்சீவினி என புகழ்ந்துறைக்கப்பட்டுள்ளது. இலக்குவன் உயிரை மீட்க அனுமன் கொண்டு வந்த கரிய மருந்து மழையில் கிடைத்த சஞ்சீவி மூலிகை பற்றி தற்போது தர்க்கப்பூர்வமான விவாதங்கள் பல நிகழ்ந்து வருகின்றன. இதன் விளைவாய் அறிவியல் ஆய்வுகளில் சஞ்சீவி மூலிகை பற்றிய ஆய்வுகள் நிகழ்த்த பெற்று ‘செலாஜீனெல்லா பிரையோடிப்ஸ் - சஞ்சீவினி பூதி’, ‘டெஸ்மோட்ரிகம் பிம்ரியேடம் - ஜீவகா’ ஆகியவற்றை சஞ்சீவி மூலிகைகள் என கண்டறியப்பட்டுள்ளன. கம்பர் உடலுக்கு உகந்த மருந்து பொருட்களையும் உயிர் நீத்த உடலை பாதுகாக்கும் முறைகள் பற்றியும், மந்திரங்கள், மருந்தாகும் மக்கள் நம்பிக்கை பற்றியும், படைவீரர்களுக்கு பேருதவிப் புரிந்த காந்த சிகிச்சை முறை பற்றியும், உடலின் நன்மைக்காய் உடலினைக் கூறிட்டு செய்யும் அறுவை சிகிச்சை முறையைப் பற்றியும் குறிப்பிட்டுள்ளனர். இவை கம்பர் காலத்தில் பயன்படுத்தப்பட்ட மருத்துவ முறைகள், மருந்துகள், மருத்துவ நம்பிக்கைகள் போன்றவற்றை எடுத்துரைப்பதாக அமைந்துள்ளது.

**அடிக்குறிப்பு**

1. கம்பன் காக்கும் உலகு – தி ஹிந்தி நாளிதல் டாக்டர் லட்சுமி நரசிம்பன் அக்டோபர் 2009

**துணைநூற்ப் பட்டியல்**

1. ஞானசம்பந்தன் அ.ச, கம்பராமாயணம் உரை, என்.சி.பி.எச் சென்னை,முதற் பதிப்பு 2012.

2. சேதுபதி சொ, கம்பன் காக்கும் உலகு, பாவை பப்ளிகேஷன், சென்னை,முதற் பதிப்பு 2011.

3. ஆனந்தி ந, பெருமாள் திருமொழி மூலமும் உரை,ராமையா பதிப்பகம், சென்னை, முதற் பதிப்பு 2011.

4.சாமிநாதையர் உ.வே புறநானூறு மூலமும் உரை, உ.வே.சாமிநாதையர் நூல்நிலையம், எட்டாம் பதிப்பு 2014.

**Works Cited:**

1. Gnanasambandhan, A.S., Kambaramayanam Urai, NCBH, Chennai, 2012 (First Edition).
2. Sethupathi, C., Kamban Kaakum Ulagu, Paavai Publications, Chennai, 2011(First Edition).
3. Anandhi, N., Perumal Thirumozhi Moolamum Uraiyum, Ramaiyah Padhippagam, Chennai, 2011(First Edition).
4. Saminadha Iyer, U.V., Puranaanooru Moolamum Uraiyum, U.Ve. Saminadha Iyer Nool Nilayam, 2014.

License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.

Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.